சபரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்

வரலாறு- தரம் 10 / மூன்றாம் தவணை - வாரம் - 3

தயாரிப்பு : திருமதி.S.சுஜிதா ( கே / தெஹி / களனி த.வி )

## கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் (கி.பி.1747 -1781)

01.பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1.ஸ்ரீ விஜய இராஜசிங்கனின் மரணத்தின் பின்னர் கண்டி இராச்சியத்திற்கு மன்னனானவன் யார்?

2.கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் பதவிக்கு வரும் போது அவருக்கு எத்தனை வயது?

3.கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னனின் தந்தை யார்?

4.நாடெங்கிலும் பௌத்த சமய வளர்ச்சியை ஏற்படுத்த கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னன் யாருடைய ஆலோசனைப்படி நடவடிக்கைகளை மேற்கொண்டான்?

5.கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னன் மேற்கொண்ட பௌத்த சமய நடவடிக்கைகள் 4னைக் குறிப்பிடுக.

## இராஜாதி இராஜசிங்க மன்னன் (கி.பி.1781 – 1798)

6.கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னனின் பின்னர் கண்டி இராச்சியத்திற்கு மன்னனானவன் யார்?

7.இராஜாதி இராஜசிங்க மன்னனின் காலத்தில் நிகழ்ந்த முக்கிய நிகழ்வினைக் குறிப்பிடுக.

## ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னன் (கி.பி.1798 – 1815)

8.இராஜாதி இராஜசிங்கனின் மரணத்தின் போது பிரதம பிரதானியாக இருந்தவன் யார்?

9.பிலிமத்தலாவையினால் கண்டி இராச்சியத்திற்கு அரசனாக்கப்பட்ட மன்னர் யார்?

10.ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னனின் இளமைப் பெயர் யாது?

11.ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னன் யாரால் கைது செய்யப்பட்டான்?

12.ஸ்ரீ விக்கரம இராஜசிங்கன் ஆங்கிலேயரால் நாடு கடத்தப்பட்ட இடம் எது?

## கண்டி இராச்சியத்தின் நிர்வாக கட்டமைப்பு

13.கண்டி இராச்சியத்தின் நிர்வாக கட்டமைப்பின் முதன்மை நபராக விளங்கியவன் யார்?

14.மன்னனுக்கு உதவுவதற்கு இருந்தவர்கள் யாவர்?

15.அரசின் முக்கிய விடயங்களை கலந்துரையாடுவதற்கு காணப்பட்டது எது?

16.அரசரின் தலைமையில் கூடும் அரசபைக்கு சமூகமளிப்போர் யாவர்?

17.அரசனின் நேரடிப் பார்வைக்கு உட்பட்டிருந்த சேவைகள் எவை?

18.அரசனின் மேற்பார்வையில் பிரதம பிரதானிகள் மூலம் நிர்வகிக்கப்பட்ட பிரதேசங்கள் எவை?

19.வரி வசூலிக்கும பிரிவுகளாக காணப்பட்டவை எவை?

20.அரசனின் அதிகாரங்கள் 5னைக் குறிப்பிடுக.

## பிரதானி

21.பிரதானிகளில் காணப்பட்ட இரு பிரிவுகளும் எவை?

22.பிரதம பிரதானி எவ்வாறு அழைக்கப்பட்டார்?

23.இரண்டாவது பிரதானி எவ்வாறு அழைக்கப்பட்டார்?

24.பிரதம பிரதானி (மகா அதிகாரம், பல்லேகம்பா) நிர்வகித்த பிரதேசங்கள் எவை?

25.இரண்டாவது பிரதம பிரதானி (உடகம்பா, இரண்டாம் அதிகாரம் ) நிர்வகித்த பிரதேசங்கள் எவை?

26.பிரதானிகளின் கட்டளைகள், செய்திகளை பிராந்திய அதிகாரிகளுக்கு கொண்டு சென்றவர்கள் யாவர்?

27.கடுபுள்ளே என்போரின் பதவியின் அடையாளமாக காணப்பட்டது எது?

## மாளிகை (மஹவாசலை) க்குப் பொறுப்பான அதிகாரிகள்

| பொறுப்புக்கள் | அரசமாளிகை அதிகாரிகள் |
|---|---|
| யானைகளுக்குப் பொறுப்பானவர் | |
| பிரதம செயலாளர் | |
| களஞ்சியப் பொறுப்பாளர் | |
| புனித தந்த தாதுவுக்குப் பொறுப்பானவர் | |
| ஆடையணிகளுக்குப் பொறுப்பானவர் | |
| உணவு வழங்களுக்குப் பொறுப்பானவர் | |
| குதிரைகளுக்குப் பொறுப்பானவர் | |